நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 01.03.2026 . மலர் 04 . இதழ் 59. ஞாயிற்றுக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 01.03.2026 . VOL 04 . ISSUE 59. SUNDAY . 4 PAGES . Rs. 5

## 170 தொகுதிகளில் நேரடியாக களமிறங்கும் திமுக : கூட்டணியுடன்

# 200 சீட்டுக்கு 'டார்கெட்'

சென்னை, மார்ச்.01-

திமுக கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மமக கட்சிகளுக்கு தலா 2 சீட் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபை தேர்தலில் 'மெகா' கூட்டணியுடன் களம் இறங்கும் ஆளுங்கட்சியான தி.மு.க., இந்த முறையும் வெற்றிக் கனியை பறித்துவிட வேண்டும் என்பதில் தீவிரம் காட்டி வருகிறது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளில், 170 இடங்களில் தி.மு.க. போட்டியிட முடிவு செய்துள்ளது. மீதமுள்ள 64 தொகுதிகளையே கூட்டணி கட்சிகளுக்கு பகிர்ந்து கொடுக்க திட்டமிட்டுள்ளது.

.வேட்பாளர்கள் தேர்வில் கூடுதல் கவனம்: ஒரு பக்கம் கூட்டணி கட்சிகளை அழைத்து தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தையை நடத்தி வரும் தி.மு.க. தலைமை, மற்றொரு புறம் தங்கள் கட்சி வேட்பாளர்கள் தேர்விலும் வேகம் காட்டி வருகிறது. அதுவும் இந்த முறை வேட்பாளர் தேர்வில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. அதாவது, தொகுதி மக்களின் நற்சான்றிதழுடன், 50 சதவீதத்திற்கு மேல் வெற்றி வாய்ப்பு உள்ளவர்களுக்கு மட்டுமே போட்டியிட மீண்டும் வாய்ப்பு என்பதில் தி.மு.க. தலைமை உறுதியாக உள்ளது.



சட்டசபை தேர்தலில் 200 இடங்களில் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கும் தி.மு.க., தகுதியான வேட்பாளர்களை மட்டுமே தேர்வு செய்ய முடிவு செய்துள்ளது. அந்த வகையில், தொகுதி மேம்பாட்டு நிதியை முழுமையாக செலவு செய்தவர்கள், நிதியை செலவிடாமல் அலட்சியம் காட்டியவர்கள் என பட்டியல் தயாரித்துள்ளதாம். அதேபோல், தொகுதியில் உள்ள மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்தாமல், கட்சி தொண்டர்களிடம் நல்ல பெயர் வாங்காமல், கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தியவர்கள் பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

கடந்த 5 ஆண்டுகளில் சட்டசபை நடைபெற்ற 161 நாட்களில், அதிக நாட்கள் பங்கேற்று தொகுதி பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பியவர்களுக்கு மட்டுமே, மீண்டும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. அதேபோல், தற்போதைய எம்.எல்.ஏ.க்களுக்கு தொகுதியில் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கிறது? என்பது குறித்து 'சர்வே' எடுக்கப்பட்டு கட்சி தலைமைக்கு வழங்கப்பட்டுள்ளதாம்.

அதில், தற்போது எம்.எல்.ஏ.வாக இருக்கும் 60 பேருக்கு வெற்றி வாய்ப்பு 50 சதவீதத்திற்கும் கீழ் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாம். இதனால், அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படாது என்று தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது. இதனால், தி.மு.க. வேட்பாளர் பட்டியலில் அதிரடி மாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தகவலால் தற்போது எம்எல்ஏவாக இருக்கும் பலருக்கும் வயிற்றில் புளியை கரைக்க தொடங்கி உள்ளதாம்.

## மமக - முஸ்லீம் லீக்கிற்கு தலா 2 சீட் ஒதுக்கீடு!!

இதற்கிடையே காங்கிரசுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை திமுக தொடங்கி உள்ளது. இதே போல மதிமுக பொதுச்செயலாளர் வைகோவும் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைக்கு முன்னதாக முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினார். இந்த அதிரடி அரசியல் நகர்வுகளால் திமுக முகாமில் பரபரப்பு தொற்றிக்கொண்டுள்ளது.

பிரதமர் மோடி மதுரை வருகைக்கு பின்னர் தேர்தல் தேதி அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதால் அதற்கு முன்பாக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை நிறைவு செய்து பிரசாரத்துக்கு கிளம்ப முதல்வர் மு.க.ஸ்டாலின் தயாராகி வருகிறார். இதற்கிடையே திமுக கூட்டணியில் மனிதநேய மக்கள் கட்சிக்கும், முஸ்லீம் லீக் கட்சிக்கும் தலா 2 சீட் ஒதுக்கப்பட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தமும் கையெழுத்தானது.

## இஸ்ரேல் - அமெரிக்கா தாக்குதலில் ஈரான் அமைச்சர் - தளபதி உயிரிழப்பு

டெஹ்ரான், மார்ச்.01-

இஸ்ரேல் - அமெரிக்கா தாக்குதலில் ஈரானின் பாதுகாப்புத் துறை அமைச்சர் அமீர் நசீர்சாதே கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஈரானின் புரட்சிகர காவல்படையின் தளபதி முகமது பாக்பூரும் கொல்லப்பட்டதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

ஈரானின் அணுசக்தி திட்டம் தொடர்பாக அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பதற்றம் நிலவி வந்த நிலையில், ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து இன்று தாக்குதல் நடத்தியது.

ஈரானும் இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவத் தளங்களைக் குறிவைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், அமெரிக்க - இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் ஈரானின் பாதுகாப்புத் துறை அமைச்சர் அமீர் நசீர்சாதேவும், புரட்சிகர காவல்படையின் தளபதி முகமது பாக்பூரும் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சராக பொறுப்பேற்பதற்கு முன்பு ஈரானிய ஆயுதப் படைகளின் துணைத் தலைமைத் தளபதியாக நசீர் சாதே பதவி வகித்து வந்தார்.

கடந்தாண்டு இஸ்ரேல் தாக்குதலில் புரட்சிகர காவல்படையின் தளபதி ஹொசைன் சலாமி கொல்லப்பட்டதை தொடர்ந்து, முகமது பாக்பூர் தளபதியாக பொறுப்பேற்றது






# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் நலத் திட்ட உதவிகள்



ஈரோடு, மார்ச்.01-

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஈரோடு மாநகர் கிழக்கு மாவட்டம் சார்பில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஈரோடு மரப்பாலத்தில் நடந்தது.

மாவட்ட செயலாளர் முகமது ராஜா தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் தொழிற்சங்க பேரவை செயலாளர் ராஜேஷ் வரவேற்றார் .இதில் மாநில துணை பொது செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சண்முகவேலு கலந்து கொண்டு பேசினார் .

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் மொடக்குறிச்சி சரஸ்வதி கலந்து கொண்டு பேசியதாவது புரட்சித்தலைவர் எம்ஜிஆர் புரட்சித்தலைவி ஜெயலலிதா ஆட்சியில் வாரிசு அரசியல் என்பதே கிடையாது. சாதாரண தொண்டர்கள் கூட உயர் பதவிகளை பெற்றனர்

ஆனால் திமுகவில் வாரிசு அரசியல் நடந்து கொண்டிருக்கிறது. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சி தமிழகத்தில் மீண்டும் மலர வேண்டும் என்பதற்காக தான் பொது செயலாளர் டிடிவி தினகரன் தேசிய ஜனநாயக கூட்டணியில் சேர்ந்துள்ளார். இவ்வாறு அவர் பேசினார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பிரிவு செயலாளர் பாலு தலைமை கழக பேச்சாளர் பொன்னுசாமி மாவட்ட எம் ஜி ஆர் மன்ற செயலாளர் அர்ஜுனன் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சுமார் 250க்கும் மேற்பட்ட பெண்களுக்கு இலவச சேலைகளை மாவட்ட செயலாளர் முகமது ராஜா வழங்கினார். முடிவில் மாவட்ட துணை செயலாளர் கோட்டை சிவக்குமார் நன்றி கூறினார்.

# தூத்துக்குடியில் ஓபிஎஸ் அணியினர் கொந்தளிப்பு படங்களை அகற்றிய மாவட்ட செயலாளர் !



தூத்துக்குடி, மார்ச்.01-

திமுகவில் சேர்ந்ததால் தூத்துக்குடியில் ஓபிஎஸ் அணியினர் கொந்தளிப்பு அடைந்தனர். தங்கள் அலுவலகத்திலுள்ள படங்களை அகற்றினார். மாவட்ட செயலாளர்.

முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்துள்ளது தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகள் மத்தியில் அதிர்ச்சியை வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் இன்று காலை தனது எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். இந்த அதிரடி மாற்றம் அவரது ஆதரவாளர்கள் மற்றும் தொண்டர்களிடையே பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ஓபிஎஸ்-ஸின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தூத்துக்குடி மாநகர் மாவட்ட ஓபிஎஸ் அணி மாவட்ட செயலாளர் எஸ். ஏசாத்துறை, தனது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த ஓ. பன்னீர்செல்வத்தின் புகைப்படங்களை உடனடியாக அப்புறப்படுத்தினார்.பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஏசாதுரை "அதிமுக நிறுவனர் எம்.ஜி.ஆருக்கும், அவரை முதலமைச்சராக்கி அழகு பார்த்த புரட்சித்தலைவி அம்மாவுக்கும் ஓ. பன்னீர்செல்வம் மிகப் பெரிய நம்பிக்கை துரோகத்தைச் செய்துவிட்டார். இவரை எம்.ஜி.ஆர் மற்றும் அம்மாவின் ஆத்மாக்கள் என்றும் மன்னிக்காது.

மேலும், தூத்துக்குடியில் உள்ள தனது ஆதரவாளர்களுடன் அவசர ஆலோசனை நடத்தி, அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் குறித்து ஒரு சில நாட்களில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# பெரிய ஏரியூரில் 59 ஆம் ஆண்டு காளை விடும் திருவிழா



வேலூர், மார்ச்.01–

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம் ஒடுகத்தூர் அடுத்த பெரிய ஏரியூரில் 59 ஆம் ஆண்டு மாபெரும் காளை விடும் திருவிழா பிப் 28 சனிக்கிழமையன்று நடைபெற்றது.

வேலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திருப்பத்தூர் திருவண்ணாமலை மற்றும் சித்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து சுமார் 250க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. ஏராளமான இளைஞர்கள் காளை விடும் திருவிழாவை காணக் குவிந்திருந்தனர். குறைந்த நேரத்தில் குறிப்பிட்ட இலக்கினை கடக்கும் காளைகளுக்கு முதல் பரிசாக பல்சர் பைக், இரண்டாம் பரிசாக ஹீரோ ஸ்பிளண்டர், மூன்றாம் பரிசாக ஹீரோ எச்எப் டீலக்ஸ் உள்ளிட்ட இருசக்கர வாகனங்கள் மற்றும் பரிசுத்தொகைகள் உள்ளிட்ட மொத்தம் 50 பரிசுகள் மற்றும் சிறப்பு பரிசாக 25 பேருக்கு சீலிங் பேன்கள் வழங்கப்பட்டன.

இப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து காளைகளையும் கால்நடை மருத்துவர்கள் பரிசோதனை செய்த பிறகு அனுமதிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் காளை விடும் குழு நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் மற்றும் ஜெய் அனுமன் இளைஞர் அணியினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

# ஆட்சியில் பங்கு – காங்கிரஸ் பிடிவாதம்

சென்னை, மார்ச்.01–

திமுக – காங்கிரஸ் இடையிலான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, “திமுகவுடன் காங்கிரஸ் பேச்சுவார்த்தை சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் செல்கிறது. எங்களுக்கு என்ன தேவையோ அதனை கேட்டுள்ளோம். அவர்களும் அதனை பரிசீலிப்பதாக சொல்லியுள்ளனர். காங்கிரஸுக்கு ஒரு ராஜ்யசபா இடம் தருவதாக முதல்வர் கூறியுள்ளார்.

எங்கள் கூட்டணி கொள்கை ரீதியான, இயற்கையான, உறுதியான, மதவாதத்துக்கு எதிரான கூட்டணி. இதனை சிதைக்க யாரும் முயற்சி செய்ய வேண்டாம். எங்கள் கூட்டணி தமிழ் மண்ணை காக்கும் கூட்டணி. ஒருபோதும் பாஜகவுக்கும், அதிமுகவுக்கும் இடமில்லை.

ராகுல் காந்தி தமிழகத்தின் மீது பற்று வைத்துள்ளார். மதவாத சக்திகள் தமிழகத்தில் நுழைய நாங்கள் விடமாட்டோம். தவெகவுடன் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்துவதாக கிரிஷ் சோடங்கர் சொல்லவில்லை. தவெகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்துவதாக வெளியான தகவல் வதந்தி. கிரிஷ் சோடங்கர் சொல்லாத கருத்தை, அவர் சொன்னதாக கூறுவது கண்டிக்கத்தக்கது. எங்கள் உயர் தலைமை திமுகவுடன் கூட்டணி நடத்தவே கூறியுள்ளது” என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், “ திமுகவுடனான கூட்டணி பேச்சுவார்த்தை சுமுகமாகவும், நம்பிக்கையுடனும் நடக்கிறது. எங்களுக்கு தேவையான தொகுதிகள் குறித்து கேட்டுள்ளோம். எங்களின் விருப்ப பட்டியலை திமுகவிடம் கொடுத்துள்ளோம். கடந்த முறையை விட அதிக தொகுதிகளை கேட்டுள்ளோம். ஆட்சியில் பங்கு குறித்தும் திமுக குழுவிடம் பேசியுள்ளோம் என்றார்

# விளாத்திகுளத்தில் பாரதிய ஜனதா கட்சி சக்தி கேந்திர அளவிலான மத்திய அரசின் பட்ஜெட் மற்றும் சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் !



விளாத்திகுளம், மார்ச். 01-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு வடக்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் மத்திய அரசின் பட்ஜெட் மற்றும் சாதனை விளக்கத் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் சக்தி கேந்திர பொறுப்பாளர் ஆரிய பவன் முருகன் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய தலைவர் காட்டுராஜா முன்னிலை வகித்தார். இந்த நிகழ்வில் மண்டல் தலைவர் தேசிய செயற்குழு உறுப்பினர் போத்தீஸ் ராமமூர்த்தி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் கண்ணன், பிரச்சார பிரிவு மாவட்ட தலைவர் கந்தசாமி, சுற்றுப்புற சூழல் பிரிவு மாவட்டத் தலைவர் கனகவேல்ராஜ், ஓ பி சி அணி மாவட்ட துணை தலைவர் அருணாச்சலம், ஒன்றிய பொதுச்செயலாளர்கள் செந்தில்குமார், சுப்புராம்,ஒன்றிய துணைத் தலைவர் சீனி தங்கம், ஒன்றிய செயலாளர்கள் விஜய் ,சிங்கராஜ் வர்த்தக பிரிவு மாவட்டச் செயலாளர் கண்ணதாசன், கிளைத்தலைவர் பிரபாகர் மற்றும் அ இ அ தி மு க மற்றும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், ஜான் பாண்டியன் கட்சி, நிர்வாகிகள் காவி சொந்தங்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# உளுந்தூர்பேட்டை தொகுதியில் போட்டியிட டாக்டர்.காவியவேந்தன் விருப்ப மனு !



திருவெண்ணெய்நல்லூர்.மார்ச்.01-

தமிழகத்தில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதையடுத்து திமுக சார்பில் விருப்ப மனுக்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் பெறப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருவெண்ணெய்நல்லூர் அருகே பெரியசெவலை கிராமத்தை சேர்ந்த வேந்தன் மருத்துவமனையின் தலைமை நிர்வாகியும், விழுப்புரம் திமுக தெற்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளருமான டாக்டர். சீனு.காவியவேந்தன் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த அவர், வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் இளைஞர்களுக்கு பெரும்பாலான வாய்ப்புகள் வழங்கப்படும் என மாநில இளைஞரணி செயலாளரும், தமிழக துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ள நிலையில், என்னைப் போன்ற இளைஞர்களுக்கு வாய்ப்பு அளித்தால் தமிழகத்தின் இளம் சட்டமன்ற உறுப்பினராக களப்பணியாற்ற தயாராக இருப்பதாக கூறினார்.

# கிருஷ்ணகிரி முன்னாள் கிழக்கு மாவட்ட தலைவர் எல் . சுப்பிரமணியனிடம் மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஹரிஸ் பாபு ஆசிப்பெற்றார் !



கிருஷ்ணகிரி, மார்ச்.01-

கிருஷ்ணகிரி முன்னாள் கிழக்கு மாவட்ட தலைவர் எல் . சுப்பிரமணியனிடம் மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஹரிஸ் பாபு பொன்னாடை அணிவித்து ஆசிப்பெற்றார் . கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்றுள்ள ஹரிஸ் பாபு கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளை சந்தித்து பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தி வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட காவேரிப்பட்டினத்தில் முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் அவர்களை நேரில் சந்தித்த மேற்கு மாவட்டத் தலைவர் ஹரிஸ் பாபு பொன்னாடை அணிவித்து தனது வாழ்த்தினை தெரிவித்ததோடு ஆசியும் பெற்று கொண்டார், இதனைத் தொடந்தது முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் முத்துக்குமார் அவர்களையும் வட்டார காங்கிரஸ் தலைவர் விவேகானந்தன், ஆகியோரையும் சந்தித்து பென்னாடை அணிவித்தார். தொடர்ந்து காங்கிரஸ்மாநில செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ராஜேந்திர வர்மா , முன்னாள் மாவட்ட தலைவர் நாராயண மூர்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர் ஏகம்பவாணன் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள

எம்.ச.இரகு அவர்களையும் சந்தித்து சால்வை அணிவித்து ஆசிப் பெற்றார். அப்போது காங்கிரஸ் கட்சியின் எஸ்.சி எஸ்.டி பிரிவு மாநில செயலாளர் மூர்த்தி ,கெலமங்கலம் வட்டார காங்கிரஸ் தலைவர் சுந்தர்ராஜன், முன்னாள் இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் முனிராஜ், சூளகிரி வட்டாரத் தலைவர் முனியப்பன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்



மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மைய கருத்தரங்கு கூடத்தில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் மூலம் தயாரித்து வைக்கப்பட்டுள்ள பல்வேறு கைவினைப் பொருட்களை இந்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் செயலாளர் ஸ்ரீனிவாஸ் கட்டிகிதலா பார்வையிட்டார் அருகில் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், தலைமை பொறியாளர் பாபு மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பொறியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# ‘என் ஊர் என் கனவு’ திட்டம் நிகழ்ச்சியில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயன்பெற்று வரும் சாதனையாளர்களுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கேடயம் வழங்கி சிறப்பித்தார்



சிவகங்கை, மார்ச்.01-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட தனியார் மஹாலில் நடைபெற்ற ”என் ஊர் என் கனவு” திட்டம் நிகழ்ச்சியில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயன்பெற்று வரும் சாதனையாளர்களுக்கு மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் கேடயம் வழங்கி சிறப்பித்து தெரிவிக்கையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் தொலைநோக்கு சிந்தனையுடன் சிந்தித்து, உரிய திட்ட பயன்களை தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கிட வேண்டும் என்ற உயரிய நோக்கில் நாளுக்கு நாள் பல்வேறு புதிய திட்டங்களை தமிழகத்தில் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், மாண்புமிகு தமிழ்நாடு அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த திட்டமாக ”என் ஊர் என் கனவு” திட்டம் தமிழகம் முழுவதும் சிறப்பாக

செயல்படுத்தப்பட்டு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் பயனாளர்களாகிய சாதனையாளர்கள் தங்களது திட்டப் பயன்கள் குறித்தும், அவர்களது கனவை எடுத்துரைப்பதற்கும், அதற்கு செயல்வடிவம் அளிப்பதற்கு அடிப்படையாக விளங்கிடும் வகையிலும் ”என் ஊர் என் கனவு” திட்டமானது சிறந்து விளங்கி வருகிறது.

மேலும், தமிழகத்திலுள்ள ஒவ்வொரு ஊரையும், நவீன வசதிகளுடன் மேம்படுத்துவதற்கு ஏதுவாக பொதுமக்களின் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் கனவுகளை கேட்டறிந்து, வருகின்ற 2030 ஆம் ஆண்டிற்குள் பொதுமக்களின் கருத்துக்களுக்கு ஏற்றவாறு ஊரை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகவும் அமைகிறது. குறிப்பாக, 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊர் குறித்த வளர்ச்சிக்கான தொலைநோக்கு அறிக்கையினை தயாரிப்பதற்கும் அடிப்படையாக ”என் ஊர் என் கனவு” அமைந்துள்ளது. தற்போது, மாவட்டத்தின் வளர்ச்சியினை திட்டமிடுவதற்கென ” என் ஊர் என் கனவு” எனும் தொலைநோக்கு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஊரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டுள்ளது. தங்களது சொந்த ஊரில் உள்ள பள்ளிகள், நூலகங்கள், மருத்துவமனைகள் மற்றும் பொது இடங்களை மேம்படுத்த நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்க வழிவகையும் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் தார்சாலைகள், தெரு விளக்குகள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை அமைத்தல், ஊர்களில் மரக்கன்றுகள் நடுதல், நீர்நிலைகளான குளம், ஏரிகளை தூர்வாருதல் போன்ற சுற்றுச்சூழல் பணிகளை மேற்கொள்ளவும், ஊர் மக்கள் தங்களது கனவு ஊரை உருவாக்குவதற்கு வாய்ப்பாகவும் ” என் ஊர் என் கனவு” திட்டம் விளங்குகிறது. அந்தவகையில், சிவகங்கை மாவட்டத்தை 2030ஆம் ஆண்டிற்குள் பொருளாதார மற்றும் கலாச்சார மையமாக மாற்றுவதற்கு கனவுகள் மற்றும் இலக்குகள் என்ற தொலைநோக்கு பார்வையினை அடிப்படையாக கொண்டு, சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் உள்ள 3,80,738 வீடுகளில், 3,79,807 வீடுகளில் நேரடியாக உங்க கனவை சொல்லுங்க திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களிடமும் எதிர்கால தேவைகள் குறித்து கேட்டறியப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு துறைகளின் கீழ் சாதனை புரிந்த 128 சாதனையாளர்கள் தங்களின் சாதனைகள் குறித்து இந்நிகழ்ச்சியின் வாயிலாக எடுத்துரைக்க வருகைபுரிந்துள்ளனர். அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கேடயங்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டுள்ளது. தங்களது சாதனைகள் குறித்தும் எதிர்கால கனவுகள் குறித்தும் எடுத்துரைத்தமைக்கு எனது வாழ்த்துக்களை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னதாக, அரசின் பல்வேறு திட்டங்கள் வாயிலாக பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, அம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மற்றும் தீர்வும் தொடர்ந்து காணப்பட்டு வருகிறது. குறிப்பாக, பொதுமக்களின் கனவுகளை நிறைவேற்றுவதற்கென ”உங்க கனவ சொல்லுங்க” என்ற திட்டமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வீடுதோறும் கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்பட்டு, ஒவ்வொரு குடும்பத்தாரின் கனவுகளும் அதற்குரிய செயலியில் திட்ட தன்னார்வலர்கள் வாயிலாக பதிவேற்றமும் செய்யப்பட்டு வருகிறது. எனவே, 2030 ஆம் ஆண்டிற்குள் பொதுமக்களின் கனவிற்கு செயல்வடிவம் அளித்திடும் வகையில், தங்களது ஊரினை சிறப்பு வாய்ந்த ஊராக மாற்றுவதற்கு அனைவரும் ஒன்றினைந்து செயல்படுவோம் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி கவிதப்பிரியா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அனீஷ் சத்தார், நகர்மன்ற உறுப்பினர்கள் சரவணன் மற்றும் அயுப்கான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி வடக்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஸ்ரீகுமார் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி (தனி), சங்கரன் கோவில் சட்டமன்ற தொகுதி (தனி) ஆகிய இரண்டு தொகுதிகளுக்கு திராவிட முன்னேற்ற கழகம் சார்பாக போட்டியிடுவதற்கு அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனு அளித்தார்.

# ஒழுகினசேரியில் ரயில்வே பாலம் அமைக்கும் பணி : விஜய் வசந்த் எம்பி ஆய்வு



நாகர்கோவில், மார்ச்.01-

நாகர்கோவில் ஒழுகினசேரி பகுதியில் ரயில்வே நிர்வாகம் சார்பில் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணியை குமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் ரயில்வே அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டார். மேலும் இந்த பாலம் நாகர்கோவில் சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டு வருகிறது இந்த பாலப் பணி குறித்து ரயில்வே அதிகாரிகள் கூறும் போது பாலப்பணிகள் முழுமையாக நிறைவடைதற்கு இப்பகுதியில் மாவட்ட நிர்வாகம் போக்குவரத்தை மாற்றி தர வேண்டும் அப்படி மாற்றி தந்தால் இந்த பணி 15 நாட்களுக்குள் முடிவடையும் எனவும் தெரிவித்தார்.

இதில் மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் நவீன்குமார், மாநிலச் செயலாளர் சீனிவாசன், ரயில்வே அதிகாரிகள் ஸ்ரீகுமார், ஆனந்த், ஜெயச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோவை மாவட்ட பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவையின் ஆண்டு விழா



கோவை, மார்ச்.01-

கோவை போத்தனூர் ரயில்வே அரங்கில் கோவை மாவட்ட பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவையின் 49வது ஆண்டு விழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது .விழாவிற்கு வந்த தமிழ் அறிஞர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் பேரவையின் நிர்வாகிகளையும் பேரவையின் தலைவர்பாவலர். இரா.தம்பிதுரை வரவேற்றார்.

பாவேந்தர் பாரதிதாசன் பேரவையின் 49வதுஆண்டு விழாவுக்குமுத்து எஞ்சினியரிங் நிர்வாக இயக்குநர் அரிமா முத்து. டாக்டர்.ஆர் பழனிசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கவிஞர் பொன் சிங் அவர்களின் உண்மை உறங்கும் நேரம் உறவும் பிரிவும் உள்ளத்தின் கதவுகள் ஆகிய 25 புத்தகங்களை பாவேந்தர் பாரதி தாசன்பேரவைக்கு நன்கொடையாக வழங்கினார்.தமிழ் இலக்கியவட்டத்தில் உள்ள படைப்பாளிகள் கவிஞர்கள் எழுத்தாளர்களை அரவணைத்து தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு வரும் வள்ளல் அரிமா முத்து.டாக்டர்.ஆர். பழனிசாமி அவர்களுக்கு கவிஞர் பொன் சிங்காரம் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்.செயல் தலைவர் பொறியாளர் கருணாநிதி நன்றி உரையாற்றினார்.

# அரசனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் எனது இளைய பாரதம் இணைந்து நடத்திய தேசிய அறிவியல் தின கொண்டாட்டம்




சிவகங்கை, மார்ச்.01–

சிவகங்கை மாவட்டம் அரசனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் எனது இளைய பாரதம் மற்றும் அரசனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி இணைந்து நடத்திய அறிவியல் தின கொண்டாட்டம். வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மாவட்ட இளையோர் அலுவலர் P.V.பிரவீன்குமார், RAKSHAN V M (Founder and CEO of Rakshan Earth and Space Tech), இந்தோ திபெத் எல்லை பாதுகாப்பு படை டெப்டி கமென்ட் கமாண்டோ முருகன், பள்ளி தலைமை ஆசிரியர் மகிஷா தலைமை ஏற்று நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி கணித ஆசிரியர் இராம சுப்பிரமணியன் வரவேற்புரை ஆற்றினார்.மேலும் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு எனது இளைய பாரதத்தின் சார்பாக சான்றிதழ் கேடயம் வழங்கப்பட்டது. மேலும் சிறப்பு விருந்தினர் Rakshan அவர்களின் சார்பாகவும் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் கேடயம் வழங்கப்பட்டது. மேலும் பள்ளி மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்தி மாணவ மாணவிகளை போட்டியில் கலந்து கொள்ள வைத்த பள்ளி ஆசிரியர்கள்: இராமசுப்பிரமணியன், விஜயபாரதி, இராஜலெட்சுமி, செல்வராணி, சங்கரலெட்சுமி, சரஸ்வதி, உமா, ஆகியோர் மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கண்காட்சியை பார்வையிட்டு ஆசிரியர்களை பாராட்டி சென்றனர். நிகழ்ச்சியின் முடிவில் பள்ளி அறிவியல் ஆசிரியர் விஜயபாரதி நன்றி உரை கூறினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஷிபா சிறப்பாக செய்திருந்தார்.






# தூத்துக்குடி கிழக்கு மண்டலத்தின் சார்பில் தெருமுனைப் பிரச்சாரம்



தூத்துக்குடி, மார்ச்.01–

தூத்துக்குடி கிழக்கு மண்டலத்தின் சார்பில் இரண்டாம் கேட்டு பத்திரகாளி அம்மன் கோவில் அருகில் நேற்று தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது. இதில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கிழக்கு மண்டல தலைவர் ராஜேஷ் கனி தலைமை வகித்து உரையாற்றினார். அப்போது அவர் தூத்துக்குடி மாநகராட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு முறைகேடுகள் மற்றும் நிர்வாக குளறுபடிகள் குறித்து கடுமையாக விமர்சித்தார்.

“மக்கள் அடிப்படை வசதிகளுக்காக காத்திருக்கின்றனர். கழிவுநீர் வடிகால், சாலை அமைப்பு போன்ற பணிகளில் உரிய கவனம் இல்லை. ஒதுக்கப்பட்ட நிதி முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பது பொதுமக்களிடம் கேள்விக்குறியாக உள்ளது,” என்றார்.மேலும் அவர் பேசுகையில், மத்திய அரசு அமைக்கும் சாலைகளில் வாகனங்கள் செல்லும் போது மங்கள இசை கேட்கும் அளவுக்கு தரமான சாலைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால் தூத்துக்குடியில் சாலைகளில் உள்ள பள்ளங்களில் வாகனங்கள்

விழுந்தால், விழுந்தவர்களின் வீட்டில் சங்கு ஓசை கேட்கும் நிலை உருவாகியுள்ளது. இது நகைச்சுவையாக சொல்லப்படுகிறதல்ல; மக்களின் வேதனையை வெளிப்படுத்தும் உண்மை,” என்று கடுமையாக விமர்சித்தார்.

சாலைகள் சேதமடைந்ததால் பொதுமக்கள் அன்றாடம் அவதிப்படுகின்றனர் என்றும், உடனடி சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் பாஜக சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டிய சூழல் உருவாகும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை தலைவர் சண்முகசுந்தரம் ஓ பி சி மாநில செயற்குழு உறுப்பினர் பாலமுருகன் கிழக்கு மண்டல பொதுச்செயலாளர்கள் சண்முகசுந்தரம் லட்சுமி வேல்கனி கெறையரா கிழக்கு மண்டல செயலாளர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் பாலகிருஷ்ணன் கந்தசாமி ஜெயரூபி ஹரி மற்றும் அணி பிரிவு நிர்வாகிகள் பிதலிஸ் உஷா தேவி ஓம் பிரபு பிரியா மற்றும் பல்வேறு பாஜக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா நிறைவடைந்தது



இராமேஸ்வரம், மார்ச், 01–

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா விமர்சையாக நடைபெற்று முடிந்தது. நீண்ட நேரமாக வெயிலில் காக்க வைத்திருந்ததால் இலங்கை இந்திய பக்தர்கள் அவதியடைந்தனர். கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா விமர்சையாக நடைபெற்று முடிந்த நிலையில் திருவிழாவுக்கு வந்திருந்த இரு நாட்டு பக்தர்கள் மீண்டும் தாயகம் திரும்புவதற்காக பல மணி நேரம் கடற்கரை மணலில் வெயிலில் காத்திருந்ததால் மிகுந்த அவதியடைந்தனர்.

இந்திய இலங்கை மக்களின் உறவு பாலமாக உள்ள கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

திருவிழாவுக்கான கொடியை நெடுந்தீவு பங்குத்தந்தை பத்திநாதன் ஏற்றி வைத்து விழாவை தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து சிலுவைப்பாதை, திருப்பலி, தேர் பவனி உள்ளிட்டவைகள் நடைபெற்றது. திருவிழாவை ஒட்டி தேவாலயம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டதால் தீவு முழுவதும் பிரகாசித்தது.

கச்சத்தீவு திருவிழாவின் முக்கிய நிகழ்வான கூட்டு திருப்பலி இன்று காலை யாழ் மறை மாவட்ட ஆயர் மற்றும் சிவகங்கை மறை மாவட்ட ஆயர் முன்னிலையில் நெடுந்தீவு பங்குத்தந்தை பத்திநாதன் மற்றும் ராமேஸ்வரம் வேர்கோடு பங்கு தந்தை தாமஸ் பரிபாலன் கூட்டாக தமிழ் மற்றும் சிங்கள மொழியில் திருப்பலி நடத்தினர். திருவிழாவிற்கு 3751 இந்திய பக்தர்களும், 9,000 மேற்பட்ட இலங்கை பக்தர்கள் என சுமார் 13,000 மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

திருவிழாவுக்கு சென்றிருந்த பக்தர்களுக்கு இன்று காலை இலங்கை கடற்படையின் சார்பில் உணவு வழங்கப்பட்டது. மேலும் நெடுந்தீவு பிரதேச செயலர் கச்சத்தீவுக்கு வந்திருந்த இரு நாட்டு பக்தர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதுடன் குற்ற சம்பவங்களை தடுக்க தற்காலிக காவல் நிலையம் அமைக்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கான கச்சத்தீவு திருவிழா நடைபெற்று முடிந்த பின் இரு நாட்டு பக்தர்களும் தாயகம் திரும்புவதற்காக கச்சத்தீவு கடற்கரையில் பல மணி நேரம் படகுக்காக வெயிலில் காத்திருந்ததால் வயது முதிர்ந்தவர்கள் மற்றும் பெண்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். இனி வரும் ஆண்டுகளில் கச்சத்தீவு கடற்கரையில் பக்தர்கள் காத்திருப்பதற்கு இடத்தில் தற்காலிக நிழற்குடை அமைத்து தர வேண்டும், படகுகளில் பக்தர்கள் ஏறி செல்வதற்கு கூடுதலாக படகு நிறுத்தும் தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த திருவிழாவில் நடைபெற்ற கூட்டு திருப்பலியில் இலங்கை கடற்படையின் வைஸ் அட்மிரல் மனகோடா, இலங்கை கடற்படையின் வடக்கு கட்டளை தளபதி கேப்டன் லியங்கமேகி, இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் சந்திரசேகர், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக அதிகாரி சாய் முரளி உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர். சந்திரசேகர் கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது, கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதை அனுமதிக்க முடியாது, தமிழக அரசியல்வாதிகள் தேர்தல் நேரங்களில் கச்சத்தீவை அரசியலுக்காக பயன்படுத்துகின்றனர்.

தவெக தலைவர் விஜய் தனிபட்ட பிரச்சனையை தீர்க்க முடியாமல் உள்ள நிலையில் அவர் எப்படி கச்சத்தீவை மீட்பார் என கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பேசியவர் இரு நாட்டு மீனவர் பிரச்சனை தொடர்பாக இந்தியா வந்திருந்த போது இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம பேசியுள்ளார். விரைவில் மீனவர் தீர்வ காண்பது தொடர்பாக தான் நேரில் இந்தியா வந்து பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக தெரிவித்தார்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# அம்பை தொகுதி திமுக வேட்பாளர் புதிய முகமா?



நெல்லை, மார்ச்.01-

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நெருங்கி விட்ட நிலையில் தேர்தலில் அம்பை தொகுதி திமுக வேட்பாளராக புதிய முகம் போட்டியிடலாம்? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது

நடைபெற இருக்கின்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் களம் காண அனைத்து அரசியல் கட்சிகளும் வெற்றி வியூகங்கள், மற்றும் வேட்பாளர்களை களம் இறக்குதல், கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு, ஆதரவு கட்சிகளுடன் அனுசரணை என தீவிரமாக இருக்கின்றன

இந்நிலையில் வழக்கம் போலவே தேர்தல் களத்தில் அடித்து ஆடி கோப்பையை கைப்பற்ற திமுகவும் தீவிரமாக இறங்கி தேவையான முன்னேறப்பாடுகளை செய்து வருகின்றது

இந்நிலையில் திருநெல்வேலி மாவட்டத்தில் முக்கிய தொகுதியான அம்பை தொகுதியில் 2021 தேர்தலில் அதிமுக மற்றும் திமுக கூட்டணிக்கு இடையிலான கடும் போட்டி காணப்பட்டது அதில் அதிமுக வெற்றி பெற்றது தற்போது 2026 தேர்தலில் திமுக வேட்பாளராக புதிய முகம் போட்டியிட்டால் வெற்றிக்கனி எளிது என தெரிய வருகிறது இந்த அம்பை தொகுதி, வரலாற்று ரீதியாக ஆளுங்கட்சியைத் தீர்மானிக்கும் தொகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது

அம்பை தொகுதியில் கடந்த 6 சட்டமன்றத் தேர்தல் விபரத்தை பொறுத்தவரை

1996 சட்டமன்றத் தேர்தலில் திமுக வேட்பாளர் ஆவுடையப்பன் சுமார் 55,000+ வாக்கு பெற்று வெற்றி பெற்றார் எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் முருகையா பாண்டியன் சுமார் 8,000+ வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்

2001 தேர்தலில் அதிமுக வேட்பாளர் முருகையா பாண்டியன் சுமார் 60,000+ வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் திமுக வேட்பாளர் ஆவுடையப்பன் சுமார் 10,000+ வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்

2006 தேர்தலில் திமுக வேட்பாளர் ஆவுடையப்பன் சுமார் 58,000+ வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் முருகையா பாண்டியன் சுமார் 5,000 ரூ 7,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்

2011 தேர்தலில் அதிமுக வேட்பாளர் இசக்கி சுப்பையா சுமார் 73,000+ வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் திமுக வேட்பாளர் ஆவுடையப்பன் சுமார் 15,000+ வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்

2016 தேர்தலில் அதிமுக வேட்பாளர் முருகையா பாண்டியன் சுமார் 10,000+ வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்

கடந்த 2021 தேர்தலில் அதிமுக வேட்பாளர் இசக்கி சுப்பையா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் ஆவுடையப்பனை 16915 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றார். இந்தச் சட்டமன்றத் தொகுதி திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். 2024-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இந்திய தேசிய காங்கிரஸ் தனது வெற்றியைப் பதிவு செய்தது முக்கியமாகும்

தற்போது வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக், தேமுதிக என பலத்த கூட்டணி மற்றும் ஆளுங்கட்சி என வலுவாக உள்ளது . அதிமுக கூட்டணி பாஜகவுடன் இணைந்தாலும் ஒருங்கிணைப்பு இல்லாத நிலை உள்ளது தமிழக வெற்றிக் கழகம் புதிதாக வந்துள்ள நிலையில் புதிய சூழல் ஏற்பட்டுள்ளது

இத் தொகுதியில் சமூக ரீதியாக நாடார், கோனார், முக்குலத்தோர், தாழ்த்தப்பட்டோர் அதிகம் வசிக்கும் பகுதியாகும்

தற்போது திமுக சார்பில் இத் தொகுதியில் பலர் போட்டியிட விருப்பம் தெரிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது தொகுதி பங்கீட்டில் இத் தொகுதி திமுகவிற்கு ஒதுக்கப்படும் பட்சத்தில் புதிய முகமாக தொகுதி மக்களிடம் நன்கு அறிமுகமான, கட்சியில் செல்வாக்கு உள்ள, பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடிய எவ்வித கெட்ட பெயரும் இல்லாத, வேட்பாளர்களை திமுக தலைமை தேர்ந்தெடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பணபலம் மட்டுமல்ல மக்களிடம் வேட்பாளர்களின் அறிமுகம், செல்வாக்கு, அவர் சார்ந்த சமுதாய பின்னணி, கூட்டணி கட்சிகளின் முழு ஒத்துழைப்பு, ஆளும் கட்சியினரின் எழுச்சி ஆளுங்கட்சியின் மகளிருக்கு இலவச பயணம், கல்வியில் புதுமை, மக்களோடு முதல்வர், உங்கள் தொகுதியில் முதல்வர், தாயுமானவர், பொங்கல் தொகுப்பு ரூ 3000, மகளிர் உரிமைத் தொகை மற்றும் கோடைகால சிறப்பு தொகுப்பு ரூ5000 கல்லூரி மாணவர்களுக்கு இலவச லேப்டாப் என மக்களின் வரவேற்பை பெற்ற திட்டங்களுடன் ஆளும் கட்சியின் மீது மக்கள் மத்தியில் நம்பிக்கை இருப்பதால் வெற்றி நிச்சயம் என நம்பப்படுகிறது

இந்நிலையில் அம்பை சட்டமன்றத் தொகுதியில் புதிய முகமான கரிசலை சேர்ந்த தற்போதைய மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் சாலமோன் டேவிட் போட்டியிட்டால் எளிதில் வெற்றி பெறலாம் என இப் பகுதி தொண்டர்கள் கருதுகின்றனர்

இவர் எம்ஏ, பிஎட் படித்து ஆசிரியர் கனவோடு வலம் வந்தவர் மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டதால் கட்சி பணியிலும் மக்கள் நல பணியிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் இவரது மனைவி அம்பாசமுத்திரம் தொகுதி விக்கிரமசிங்கபுரத்தை சேர்ந்தவர் மகளும், மகனும் உள்ளனர் மகன் வழக்கறிஞராகவும் மகள் எம்பிஏ பட்டதாரி ஆகியுள்ளார்

2 முறை மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினராக வெற்றி பெற்று தொகுதி முழுவதும் நன்கு அறிமுகமாகி அப்பகுதி மக்களின் நம்பிக்கையே பெற்று திறம்பட பணியாற்றி வருகிற நிலையில், இனிமையாக பழகக் கூடியவர், எல்லோரும் எளிதாக சந்தித்து பேசக்கூடிய நபர், பொது பிரச்சனைகளுக்கு முன் நின்று போராடக் கூடியவர், உதவிடும் தன்மையுடையவர்,

அம்பை தொகுதியின் வெற்றி தோல்வியை நிர்ணயித்து வேட்பாளர்களை வெற்றி பெற வைக்கும் நாடார் வகுப்பை சார்ந்தவர் என்பதுடன் சமுதாய ரீதியாக அவர் சார்ந்த சமூகத்தில் மட்டுமல்லாமல் அனைத்து பொது பிரச்சினைகளுக்கும் சுமூகமான தீர்வை கொடுத்து உதவி வருவதால் அனைத்து சமுதாய மக்களிடமும் அறிமுகமானவர் கட்சி நடத்திய அனைத்து போராட்டங்கள் மற்றும் கூட்டங்களில் தவறாமல் பங்கு பெற்று வரும் களப்போராளி

மேலும் இவருக்கு வலு சேர்க்கும் வகையில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் மற்றும் அனைத்து கூட்டணி கட்சிகளும் ஒருங்கிணைந்து செல்லக் கூடியவர் தென்னிந்திய திருச்சபை திருநெல்வேலி திருமண்டலத்தில் பல பொறுப்புகள் வகித்து இயக்குனராகவும், பாளையங்கோட்டையில் பிரசித்தி பெற்ற கதீட்ரல் மேல்நிலைப் பள்ளியின் தாளாளராகவும், நிர்வாக குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர் இந்நிலையில் இத்தொகுதியின் வெற்றியை உறுதி செய்யும் நாடார் மற்றும் அனைத்து தரப்பின் வாக்குகளை அதிகம் பெற்று புதிய முகம் வேட்பாளராக சாலமன் டேவிட் களமிறங்கினால் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதாலும் தற்போது இந்த தொகுதியில் தேவர் சமுதாய வாக்குகள் சுமார் 60000, நாடார் சமுதாய வாக்குகள் சுமார் 56000 தாழ்த்தப்பட்ட மக்கள் வாக்குகள் சுமார் 30000 யாதவர் சமுதாய வாக்குகள் சுமார் 15000 பிள்ளைமார் சமுதாய வாக்குகள் சுமார் 25000 இதர வாக்குகள் சுமார் 25000 என உள்ளன

இந்நிலையில் நாடார் சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்த சாலமோன் டேவிட் வேட்பாளராக களம் காண வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது புதிய முகம் வெற்றி முகமாகுமா? திமுக தலைமை முடிவெடுக்கும்

ஏற்கனவே கடந்த 3 சட்டமன்றத் தேர்தலிலும் திமுக தொடர் தோல்வியை சந்தித்து வரும் நிலையில் உள்ளாட்சி தேர்தலில் 90 சதவீதமும் இரண்டு பாராளுமன்ற தேர்தல்களிலும் அம்பை சட்டமன்றத் தொகுதியில் திமுக கூட்டணி சுமார் 25 ஆயிரம் அதிக வாக்குகள் பெற்றது குறிப்பிடத்தக்கது.

### மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி

# முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும்!

### வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ அறிக்கை



சங்கரன்கோவில். மார்ச்.1-

தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

திமுக தலைவர், இன்று இந்தியாவிலேயே கல்வித்துறை, சுகாதாரதுறை, தொழில் துறை, மகளிர் திட்டங்கள் என்பன உள்ளிட்ட பல்வேறு திட்டங்களால் நம்பர் ஒன் முதல்வராக திகழ்ந்து வருகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும் எனவும், தற்போது தமிழ்நாட்டில் ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்ற முழக்கம் பொதுமக்களிடையே பரவலாக பரவி உள்ள சூழ்நிலையில் கழக நிர்வாகிகள் திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்களை பொதுமக்களுக்கு எடுத்து கூறும் வகையில் செயல்பட வேண்டும் எனவும், தனது பல்வேறு திட்டங்களால் தமிழ்நாட்டை இன்று இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றி உள்ள முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்க வேண்டும் எனவும், மேலும் வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி அமோக வெற்றி பெற அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிறந்த நாளில் சபதம் ஏற்போம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# வணிகர் சங்க நிர்வாகிகள் எஸ்.பி.யை சந்தித்து வாழ்த்து



நாகர்கோவில், மார்ச். 1-

தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கத்தின் கன்னியாகுமரி மத்திய மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள நிர்வாகிகள், மாவட்ட காவல் கண்காணிப்பாளரை மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்த சந்திப்பின்போது வணிகர் நலன், வணிக வளாகங்களின் பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு நிலைமை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், புதிதாக பொறுப்பேற்றுள்ள நிர்வாகிகளுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்ததுடன், வணிகர்களின் பாதுகாப்பிற்கு காவல் துறை தொடர்ந்து துணை நிற்கும் என தெரிவித்தார். இந்த சந்திப்பில் வணிகர் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.






### கிருஷ்ணகிரியில் சிகரம் சாரிட்டபிள் டிரஸ்ட் மற்றும் அன்னை கஸ்தூரிபாய் சமூக சேவை சங்கம் சார்பில் ஹேப்பி ஹோம்ஸ்-ன் பயனாளிகள் நலத்திட்ட விளக்க உரை



கிருஷ்ணகிரி ,மார்ச்.1–

சிகரம் சாரிட்டபிள் டிரஸ்ட் மற்றும் அன்னை கஸ்தூரிபாய் சமூக சேவை சங்கம் சார்பில் ஹேப்பி ஹோம்ஸ்–ன் பயனாளிகள் நலத்திட்ட விளக்க உரை நிகழ்ச்சி கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஹேப்பி ஹோம்ஸ் நிறுவனர் ஏ.கே.அருண்பால் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், நலத்திட்டங்கள் குறித்தும், பொதுமக்கள் இந்த நலத்திட்டங்களை எவ்வாறெல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், பைய நாயகர்கள் ஒவ்வொருவரும் மாதம் 5 கிலோ அரிசியில் சில மளிகை பொருட்களும் இலவசமாக பெறுவது, பயனாளிகளின் பெண் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு நிதி உதவி அளிப்பது, பயனாளிகளுக்கு சொந்தமாக இடம் இருந்தால் 650 சதுர அடியில் இலவசமாக வீடு கட்டி தருவது, விபத்து காப்பீடு, மருத்துவ காப்பீடு, பயனாளிகளின் குடும்பத்தை தத்து எடுத்து 15 வருடம் நிறைவு பெறும்போது மானியமாக 10 லட்சத்து 80 ஆயிரம் வழங்குவது உள்ளிட்ட எண்ணற்ற பயனாளிகளின் இலவச நலத்திட்டம் குறித்து நீண்ட விளக்க உரையாற்றினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர்.சந்திரமோகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஹேப்பி ஹோம்ஸ் குறித்த எண்ணற்ற திட்டங்களை வெகுவாக பாராட்டி பேசினார். கிருஷ்ணகிரியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை இளஞ்செழியன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். மேலும் இந்த நிகழ்ச்சிக்கு நிர்வாக இயக்குனர் சுரேஷ், நிறுவனத் தலைவர் கஜேந்திரன், இயக்குனர் வேதாச்சலம், திருப்பூர் செந்தில், சேலம் நேரு, கிருஷ்ணகிரியை சேர்ந்த ரகுநாதன், குமார், நரேஷ், குமார், ரவிக்குமார், நர்லேஸ், ரஞ்சித், உள்ளிட்ட ஏராளமானோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# அதியமான் பப்ளிக் பள்ளி கிண்டர்கார்டன் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது



ஊத்தங்கரை மார்ச்.01–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அதியமான் பப்ளிக் பள்ளியின் கிண்டர்கார்டன் மாணவர்களின் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் பள்ளியின் முதல்வர் லீனா ஜோஷ் மற்றும் துணை முதல்வர் சந்தோஷ் விழாவைத் தொடங்கி வைத்தனர். முதல்வர் அவர்கள் விளையாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாக உரையாற்றினார்.

தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவர்கள் விளையாட்டு உறுதிமொழி ஏற்று, ஒற்றுமை மற்றும் ஒழுக்கத்தின் அவசியத்தை உணர்ந்தனர். பின்னர் மாஸ்டிரில் நிகழ்ச்சி நடைபெற்றது.

ப்ரீ–கே.ஜி மற்றும் எல்.கே.ஜி மாணவர்கள் பந்துகளை சேகரிக்கும் போட்டி, கோணிப்பை ஓட்டப் போட்டி மற்றும் பென்குயின் நடைப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டனர். யு.கே.ஜி மாணவர்கள் 50 மீட்டர் ஓட்டப்பந்தயம், கோணிப்பை ஓட்டப்பந்தயம் மற்றும் கோன்கள் சேகரிக்கும் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல்வர் மற்றும் கிண்டர்கார்டன் ஆசிரியர்கள் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி பாராட்டினர்.

# கொட்டாரம் டிரைவர் கொலை : உண்மை குற்றவாளியை போலீஸ் பாதுகாப்பதாக எஸ்.பி. அலுவலகம் முன்பு குவிந்த மக்கள்!




நாகர்கோவில், மார்ச்.01-

கன்னியாகுமரி அருகே உள்ள கொட்டாரம் பகுதியில் நெல்லை மாவட்டத்தில் இருந்து பிழைப்புக்காக வந்த இடத்தில் டிரைவர் செல்லப்பாண்டி (33) என்பவர் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் அதே பகுதி தங்கபாண்டியன் (55) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

ஆனால் சம்பவத்தில் உண்மை குற்றவாளிகளை போலீஸ் கைது செய்யவில்லை எனவும், குற்றவாளிகளுக்கு போலீஸ் துணை புரிவதாக கூறி 300 க்கும் மேற்பட்டோர் நாகர்கோவில் மாவட்ட எஸ் பி அலுவலகத்தில் குவிந்தனர்.

மேலும் ஊரு விட்டு ஊரு பிழைக்க வந்த தங்கள் உறவினரை கொலை செய்த கும்பலை உடனடியாக கைது செய்ய வேண்டும் இல்லை என்றால் மாநில அளவில் போராட்டம் வெடிக்கும் என உறவினர்கள் தெரிவித்தனர். முன்விரோதத்தில் செல்ல பாண்டியை வரவழைத்து பணம் தருவதாக கூறி கொலை செய்ததாக தெரியவரும் நிலையில், போலீசார் சம்பந்தமில்லாத அப்பகுதியில் சுற்றி திரிந்த வயதான நபரை கைது செய்துள்ளது கண்டிக்கத்தக்கது. என தெரிவித்துள்ளனர்.




கிரேஸ் கல்வி நிறுவனங்களில் சமூகநீதி நாள் கொண்டாடப்பட்டது. ஆங்கிலத் துறை தலைவர் டாக்டர்.ராஜேஸ்வரி வரவேற்றார். கல்லூரி தாளாளர் கீதா பான்ஸ் குத்துவிளக்கேற்றினார். கல்லூரியின் தலைவர் டாக்டர். பான்ஸ் ஜாய் தலைமையுரையாற்றினார். சிறப்பு விருந்தினராக கிரேஸ் கல்வி நிறுவனத்தின் நிர்வாக குழு உறுப்பினர் ஜான் ஸ்டீவ் கலந்துகொண்டு கலைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத் தேர்வில் முதலிடம் பெற்ற கிரேஸ் கல்வியியல் கல்லூரி ஆங்கிலத்துறை மாணவ ஆசிரியை கிருஷ்ணா அவர்களுக்கு கல்லூரியின் தலைவர் டாக்டர் பான்ஸ் ஜாய் பரிசு வழங்கி கௌரவித்தார். கல்லூரியின் பொது மேலாளர் டாக்டர் மத்தியாஸ் நன்றி கூறினார். கல்லூரி நிர்வாகி தயாசிங் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்.

### தென்னிந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சதுரங்க போட்டிகளில் பங்கேற்கும்

# தருமபுரி அரசு கலைக்கல்லூரி மாணவி கே.சி. கவியரசியை முதல்வர் கோ. கண்ணன் வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்



தருமபுரி, மார்ச். 01-

சேலம் பெரியார் பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான மகளிருக்கான சதுரங்கப் போட்டிகள் சேலம் வைசியா கல்லூரியில் 21 - 01 - 2026 மற்றும் 22 - 01 - 2026 ஆகிய இரு நாட்களில் நடைபெற்றது.

20 க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து 100 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இதில் தருமபுரி அரசு கலைக் கல்லூரி சதுரங்க விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் 6 பேர் கலந்து கொண்டனர்.

தனிநபர் சதுரங்க போட்டிகளில் மகளிர் பிரிவில் தருமபுரி அரசு கலைக் கல்லூரி கணிதவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவி கே.சி கவியரசி மூன்றாம் இடம் பெற்று தென்னிந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சதுரங்க போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்.

தென்னிந்திய பல்கலைக்கழககளுக்கு இடையிலான சதுரங்கபோட்டிகளில் பங்கேற்க வழி அனுப்பு விழா சேலம் பெரியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகளில் மகளிர் தனி நபர் பிரிவில் மூன்றாம் இடம் பெற்ற மாணவி கே.சி. கவியரசி கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

சேலம் பெரியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான மகளிர் குழு முதன்மையாளர் போட்டிகளில் இரண்டா ம் இடங்களை வென்ற விளையாட்டு வீராங்கனைகளை கல்லூரி முதல்வர் முனைவர் கோ. கண்ணன் தகுதிச் சான்றிதழ், வெற்றி கோப்பைகளை வழங்கி வாழ்த்தினார்.

தென்னிந்திய பல்கலைக்கழககளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டிகள் தென்னிந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சதுரங்க போட்டிகள் 21 - 02 - 2026 முதல் 23 - 02 - 2026 வரை ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் GIT-AM- பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளன. இந்த போட்டிகளில் பங்கேற்க சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தால் ஆறு வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டனர். அதில் தருமபுரி அரசு கலைக்கல்லூரி கணிதவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவி கே. சி. கவியரசி தேர்வு செய்யப்பட்டு, ஆந்திர மாநிலத்திற்கு செல்ல உள்ளார். அவரை தருமபுரி அரசு கலைக்கல்லூரியின் முதல்வர் கோ. கண்ணன் 20 - 2 - 2026 அன்று கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பாராட்டுகளை தெரிவித்து வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் பாலமுருகன், கணிதத்துறை தலைவர் அரங்கநாயகி மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு கவியரசிக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து வழி அனுப்பி வைத்தனர். அனைத்து துறை பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், விரைவு ரையாளர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், மாணவ ,மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.